# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | : CC-398/2016 | Taluk | : |
| Deposition of Witness for | : PW-4 | Calling | : |
| Name | : கணேசன் | Religion | : |
| Father Name | : சுந்தரம் | Age | : |
| Village | : பாகநேரி | | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 18th November 2025.

---

**(எதிரி ஆஜரில்லை. BNSS பிரிவு 355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை:-**

நான் தற்சமயம் பாகநேரி கிராமத்தில் வசித்து வருகிறேன். சிவகங்கை பேருந்து நிறுத்தில் டைம் கீப்பராக வேலை பார்த்து தற்போது வீட்டில் உள்ளேன். கடந்த 08-04-2016-ம் தேதி மாலை சுமார் 4.15 மணியளவில் சிவகங்கை பேருந்து நிறுத்ததில் நான் வேலையில் இருக்கும் போது அக்பர் மற்றும் பாண்டி என்பவருக்கு இடையில் சண்டை நடந்தது. பின்னர் சண்டை நடந்த இடத்திற்கு சென்று பார்த்தேன். பிறகு அரைமணி நேரத்திற்குள் போலீசார் வந்து சண்டை நடந்த இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள். அதற்கு சாட்சியாக இருப்பதற்காக கேட்டதால் நானும், சரவணன் என்பவரும் கையொப்பம் செய்தோம். நான் கையொப்பமிட்ட ஆவணத்தில் அன்றைக்கு நடந்த சம்பவத்தை தான் எழுதினார்கள். பார்வை மகஜரில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். (**பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-**

சம்பவம் நடந்த இடத்திற்கு நான் எப்போது சென்றேன் என்றால், சம்பவம் நடந்த 20 நிமிடங்கள் கழித்து சென்றேன். சம்பவம் இடத்தில் எத்தனை போலீசார்கள் இருந்தார்கள் என்றால், கூட்டமாக இருந்தது, சரியாக தெரியவில்லை. நான் கையொப்பம் செய்த ஆவணத்தை படித்து பார்க்கவில்லை என்றால், சரிதான்.

சம்பவம் பற்றி எனக்கு தெரியாது என்றால், சரிதான். போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை என்றால், சரிதான். புகார்தாரர் அரசு போக்குவரத்து துறையில் ஆய்வாளராக பணியாற்றி வருவதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் சம்பவ இடத்தில் வைத்து பார்வை மகஜரில் கையொப்பம் செய்யவில்லை என்றும், காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால், சரியல்ல.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
சிவகங்கை.